உ

முருகன் துணை.

மாயவரம் S. வேதநாயகம் பிள்ளை

இயற்றிய

# தத்துவஞான வேதாந்த

# சமரஸ கீதம்




ரத்தினப் பிரஸ்,

(பிராஞ்ச்) அன்ட

65, திருப்பள்ளி தெரு, மதராஸ்-1

விலை] 1952 [0-1-0

# தத்துவஞான வேதாந்த சமரசகீதம்

உலகவாழ்வை வெறுத்தல் :—

இராகம்-இந்துஸ்தான் காப்பி, தாளம் ரூபகம.

பல்லவி

வாழ்வை நம்பாதே-மனமே-வாழ்வை நம்பாதே

அநுபல்லவி

தாழ்வில்லாத நமதுஸ்வாமி
தாளைத்தேடு பாடுபூமி (வா)

சரணங்கள்

1 தேகமாம்ஸ மூட்டை—பல
ஜெந்துக்கட்கும் நல்ல வேட்டை—அதில்
ஓகோ ஆனந்தம் ஓட்டை—உயிர்
ஓடிட எத்தனை பாட்டை இந்த (வா)
2 இன்றைக்காளுவார் நாடு—நாளை
எடுப்பார் கையிலே ஓடு—உடல்
ஒன்றுக்குதவாத கூடு—இதை
உற்றுப்பார்த்தால் வெட்கக்கேடு புவி (வா)
3 பெண்டுபிள்ளைக்கென்ன வாட்டம்—நம்மைப்
பிடுங்கித் தின்பதில் நாட்டம்—கையில்
உண்டாகும்போது கொண்டாட்டம்—செல்வம்
ஓய்ந்தால் சகலரும் ஓட்டம் புவி (வா)
4 இந்த உலகத்திற் பிறந்தார்—முன்னம்
எத்தனையோ பேர்கள் இறந்தார்—பெற்ற
தந்தைதாய் பாட்டனும் பறந்தார்—நாலு
தாரங்கள் போய்நம்மை மறந்தார் புவி (வா)
5 இன்று பல்லக்கினிற் போவார்—நாளை
எடுக்கும் ஆள்களும் ஆவார்—நரர்
என்றவர் யாவருஞ் சாவார்—பாவி
ஈனர்நரகத்தில் வேவார் புவி (வா)
6 கூத்தில் அரசனைப்போல—வேஷம்
கொண்டவர்க்குண்டோ செங்கோலே—இந்த
சாத்திய நாடகசாலை—அந்தச்
சாலையில் நாம் எந்தமூலை புவி (வா)

7 வண்டியும் ஓடத்தில் ஏறும்—ஓடம்
வண்டியில் ஏறும் நாள்தோறும்—நாம்
கொண்டபொருள் கைம்மாறும்—வேதம்
கூறுஞ்சொல்லே நிறைவேறும் புவி (வா)
8 எண்ணிக்கையில்லாமல் இங்கே—முன்னம்
இருந்தவரெல்லாம் எங்கே—நாமும்
நண்ணிப்போகவேண்டும் அங்கே—வேத
நாயகன் பாதம் நம்பங்கே புவி (வா)

உடலை வெறுத்தல் :—

இராகம்-இந்துஸ்தான் காப்பி, தாளம் ரூபகம்.

பல்லவி

உடலை நம்பாதே மனமே (உ)

அநுபல்லவி

குடலுந்தசையும் எலும்பும் நரம்பும்
கொழுத்துப்பழுத்தும் புழுத்தும் நிரம்பும் (உ)

சரணங்கள்.

1 இந்திரியம் மலமூத்திரம்—தசை
இரத்தம் நிறைந்த பாத்திரம்—பாச
பந்தப்பேய்வளர் க்ஷேத்திரம்—வெறும்
பவபந்தநாடக சூத்திரம்—இந்த (உ)
2 ஆசைப் பக்ஷியின் கூடு—பல
அசுத்தஞ்சேர் குப்பைமேடு—இதை
ஏசிப்போபோ வென்றும் வீடு—கிட்ட
எட்டிவாவா வென்னுங்காடு இந்த (உ)
3 கண்ணில் பீளைகள் வடியும்—இரு
காதிற் குறும்பிபடியும்—சளி
வண்ணமூக்கில் வடியும்—நல்ல
வாயும் எச்சலாய் முடியும் இந்த (உ)
4 பயனின்று விழுமட்டை—கொடும்
பாம்புகழற்றுஞ் சட்டை—போலே
உயிர்போனல் வெறுங்கட்டை—இதை
உற்றுப்பார்த்தா லொடலொட்டை இந்த (உ)

5 காகம் நாய்நரிக்கூட்டம்—பல
கழுகுக்கும் நல்ல ஊட்டம்—கரு
மேகம் நிழல் போலே ஓட்டம்—இது
மெய்யல்ல மொம்மலாட்டம்—இந்த (உ)

6 எத்தனைப்பேர் புவியாண்டார்—அவர்
எல்லவரு முன்னே மாண்டார்—இங்கே
செத்தவரில் எவர் மீண்டார்—தெய்வம்
சித்தம் ஒருவருந்தாண்டார்—இந்த (உ)

7 மோடியேன் ஒருக்காலே—உடல்
முழுதும் எலும்பு தோலே—அதில்
நாடி ஒடுங்கினாலே—பின்பு
நமக்கிங்கே யென்னவேலை—இந்த (உ)

8 கணவன் தெய்வமென்பாள்பாரி—அவள்
காரியத்திற் கெட்டிகாரி—செத்த
பிணமுன் வருவாளோ நேரில்—சுகம்
பிரிந்ததற்கல்லோ ஒப்பாரி—இந்த (உ)

9 கிருமிகட்குபகரணம்—தசை
கிழிந்து வடியும் இரணம்—சிறு
கருமமேற் கொள்ளுந்திரணம்—இது
கரணந்தப்பினால் மரணம்—இந்த (உ)

10 வேதநாயகன் கூறும்—சொல்லை
மீறினால் நலமாறும்—பல
காதந்துர்கந்த நாறும்—பித்தம்
கபாலமஞ்சம் ஊறும்—இந்த (உ)

---

## பெண்பார்க்கத் தூது அனுப்புதல் :—

இராகம்-உசேனி, தாளம்-ஆதி

பல்லவி

நல்லபெண்ணைப்பார்நீ தூதா
நல்லபெண்ணைப்பார்நீ தூதா (நல்ல)

அநுபல்லவி

அல்லடாகேள் இந்தப் பூமியின்மேலே
ஆயிரங்காலத்துப் பயிராகையாலே (நல்ல)

## சரணங்கள்

1 அதிகபேச்சுக்காரி பெரும்வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாந்தம்பி
நிதம்நிதம்ஊரெல்லாம் நீட்டுவாள்கம்பி
நிச்சயம் அவள் ஆகாள் நீஎன்சொல்நம்பி (நல்ல)

2 எழுத்துவாசம் அறியாதவள்மட்டி
ஏதும்அறியாள் அவள் சுரண்டுவாள்சட்டி
கழுத்திலே அவளுக்கு தாலியைக்கட்டி
கார்யமில்லை அது காசுக்குநஷ்டி (நல்ல)

3 அழகுங்குணமுள்ளவள் நல்லஜோடு
அழகில்லையாயினும் குணத்தையேதேடு
பழகுநற்குணமில்லா அழகின்வீடு
பாம்புபுலிகரடி வாழ்ந்திடுங்காடு (நல்ல)

4 வீட்டுவேலைதெரியாதவள் வேம்பு
மினுக்கும் அவள் குலுக்குமே வெறும்வீம்பு
கூட்டுதற்குணமில்லாக் கொடியவள்சாம்பு
குலத்தைக்கெடுக்கவந்தகோடாலிக்காம்பு (நல்ல)

5 நகைகள்தரித்துமஞ்சள் வாடைகள்பூசி
நாடெங்குந்தெரியவே நகைத்துக்கைவீசி
சொகுசுடன்நடப்பவள் ஆயிரந்தாசி
சும்மாவந்தாலும் அவள்வேண்டாம் சீச்சீ (நல்ல)

6 தேவதாபத்தி இல்லாதவள்கள்ளி
திருட்டுக்கும்புரட்டுக்கும் அவள் ஒருபுள்ளி
தாவில்புருஷன்குடிக்கவள் பெருங்கொள்ளி
சனியனைவிலைக்கு வாங்காமல்நீதள்ளி (நல்ல)

7 உடமைகளுடன்பணங் காசின்மேல்பிச்சை
உள்ளவள்சண்டைக்குக் கட்டுவாள்கச்சை
இடைவிடாமல் கெடுமே என்லச்சை
இவளைக்கொள்ளுவதிலும் எடுக்கலாம்பிச்சை ()

8 சந்ததங்கணவன்மேல் ஒழியாப்பத்தி
சாந்தம்பொறுமைதயை தானம்நற்புத்தி
எந்தவேளையும் உடல் ஆத்துமசுத்தி
இல்லாதவள் அவள் கழுத்துக்குகத்தி (நல்ல)

9 நல்லவள் ஏழையானாலும் தட்டாதே
நானூறுபோனாலும் நீபின்னிடாதே
பொல்லாதவள் கையில் காட்டிக்கொடாதே
புலியைக்கொண்டு வந்தென்னைத் தெருவிலிடாதே
10 சகலகாரியமுந் தெரிந்தவள்சிலாக்கியம்
தரித்திரதிசையிலும் அவள் பெரும்பாக்கியம்
இகபரமிரண்டுக்கும் அவளே யோக்கியம்
என்றுசொன்னான் வேதநாயகன் வாக்கியம் (ந)

---

## பரஸ்திரீ கவனம் விலக்கல் :—

இராகம்-கமாஸ், தாளம்-ஆதி.

பல்லவி

மாதரை நினையாதே நெஞ்சே (மா)

அநுபல்லவி

பூதலமேல் பெரும் பாதகமும் விப
ரீதமுமேவரும் ஆதலினால்-மறு (மா)

சரணங்கள்

1 அருமஞ்சபூச்சல்லவோ முகக்காந்தி
அடிக்கடி பெண்கள் நிறமாற்று பச்சோந்தி
ஒருமையா அவர்களை விரும்புதல் பிராந்தி
உடற்குட் புகுந்து பார்த்தாலே வரும்வாந்தி (மா)
2 முன்னழகும் பின்னழகுமே பட்டு
முக அழகானது நெற்றியிற்பொட்டு
அன்னநடையென்பது கவிஞர்கட்டு
அழகுநில்லாமற் பறந்திடுஞ்சிட்டு (மா)
3 மரித்திடு மாதர்கள் சுகம் அரைக்ஷணமே
மறுநிமிஷத்தில் உண்டாகுந்துன் மரணமே
பிரிந்திடில் மலஜலம் எலும்புதோல் நிணமே
பிராணன் போனால் நரிநாய்பிடுங்கிடும் பிணமே ()
4 மேனிமுழுதும் வெளி வேஷத்தின் தளுக்கு
மினுக்கெண்ணெய் பூசியே காட்டுவாள் தளுக்கு
ஈனம் அறவே தினந்தினந் தண்ணீர் முழுக்கு
இல்லாவிடில் கப்பல் ஏற்றலாம் அழுக்கு (மா)

5 இடையில் மயக்குவது சாலியன் சேலை
இருகாதில் ஜொலிப்பது தட்டான் கைவேலை
கடையிலே விற்பது கொண்டைப் பூமாலை
கன்னிக்குச் சொந்தமெல்லாம் வெறுந்தோலே ()

6 கன்னியர் விழிஉயிர் பிளந்திடும் அம்பு
கனதனம்நமன் குழல் உனைகட்டுந்தும்பு
அன்னிய மாதர்கள் விஷமென நம்பு
அவருடன் பேசவதே பெரும் வம்பு (மா)

7 இதமாகவே மனஞ் செய்தசிமாட்டி
இகபரம் இரண்டிற்குமே வழி காட்டி
இதரமின்னார்களைச் சேர்வோன் காட்டி
என்றைக்கும் அவனுக்கும் மூத்தவள் பேட்டி ()

8 என்றுங்கரமாதுர்க்கு ரோகங்கள் நிலையே
ஈ எறும்பு ஓட்ட கையில்வேண்டும் வேப்பிலையே
அன்று கொண்டவன் அறிந்தால் வருங்கொலையே
அற்பசுக்த்தில் வரும் ஆபத்துமலையே (மா)

9 கழிவிவாசனை ஊட்டாவிடில் கெட்ட வீச்சு
காதவழி அடிக்கும் இதுநீசப் பேச்சு
தொழும் அழகென்பதெல்லாம் மேற் பூச்சு
தோகையர் கிழமானால் கன ஏச்சு (மா)

10 அழகழகென்பதெல்லாம் வெறும்ஜாலம்
அணியுந்துணியும் போனால் அலங்கோலம்
விழல் நகர்சுகத்தினை வெறுப்பது சீலம்
வேதநாயகன் சொல் அநுகூலம் (மா)

---

இராகம்-சௌராஷ்டிரம், தாளம்-ஆதி

பல்லவி

பெண்ணாசையே பெரும்பித்து அதில்
பிர்மிப்ப தெல்லாம் விபத்து (பெ)

அநுபல்லவி

கண்ணாவேலைபூட்டி அற்பசுகம்
காட்டிப் புருஷரை வாட்டி வதைக்கும் (பெ)

அடையாறு, சென்னை-20.

சரணங்கள்

1 கலகலென அசைப்பார் அவர்தண்டை
காட்டுமிருகமயிரே கொண்டை
உலகமயக்கும அவர் சேலைக் கெண்டை
உற்றுப்பார்த்தால் நம்மைஏசுவார் அண்டை ()

2 கேவலம் அங்கமெல்லாம் பிணநாற்றம்
கிறுகிறனமயக்கந் தலைக்கேற்றம்
ஒத்திமேனிமினுக்கும் பொய்த்தோற்றம்
உள்ளே திரும்பிப் பார்த்தால் முழுமாற்றம் ()

3 கட்டி கட்டியாகக் கண்பீளைசாரும்
காதிற்குரும்பிகளின் எச்சல் சேரும்
கொட்டும்வியர்வை தலைப்பேனும் ஈரும்
கும்தநாற்றமாங் குளித்திட்ட நீரும் (பெ)

4 மண்ணின் எலும்புதோல் அல்லவோமாது
மற்றதெல்லாஞ்செட்டி தட்டார்செய் சூது
பெண்ணில்லாவிட்டால் பிழைப்பவர்கேது
பெண்ஜெபமும் அவர்போனால் செல்லாது ()

5 மண்ணிற்பறஸ்திரீயைச் சேருநிமித்தம்
வாழ்வுஞ்சுகமுந்தனமும் அனர்ததம்
எண்ணிலாத்துன்பமும் புண்களும் சித்தம்
ஈ எறுமபுக்கு மகோற்சவம் நித்தம் (பெ)

6 இரவிற்கூத்தாடிகள் வேஷம் எடுப்பார்
இருட்டில் எவரும மயங்கிக்கொடுப்பார்
தரையில்மின்னார் பகல்வேஷம் கொடுப்பார்
ஜாலவித்தைசெல் மிலையைக் கெடுப்பார் (பெ)

7 உண்டால் விஷம்வெட்டிலற் கொல்லுங்கத்தி
உன்னினோர்கண்டோரைக் கொல்லும் பெண்சத்தி
ஆண்டாமல் ஆடவர் ஓடுதல்புத்தி
அமர்வேதநாயகன் சொற்கேட்டால் சித்தி (பெ)

வேதாந்த சமரச கீதம் முற்றிற்று.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.